**செய்தி வெளியீடு எண்: 70** **நாள்: 24.01.2012**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (24.1.2012) தலைமைச் செயலகத்தில், சென்னை மாநகராட்சியில் பணியிலிருக்கும்போது உயிரிழந்த 76 பணியாளர்களின் வாரிசுதரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கி வாழ்த்தினார்கள்.

சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து, பணியிலிருக்கும்போது உயிரிழந்த 76 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் நான்காம் நிலை பணிகளான துப்புரவு பணியாளர் பணிக்கான பணி நியமன ஆணை 56 நபர்களுக்கும், சாலைப் பணியாளர் பணிக்கான பணி நியமன ஆணை 10 நபர்களுக்கும், மருத்துவமனைகளில் ஆயாக்கள் பணிக்கான பணி நியமன ஆணை 10 நபர்களுக்கும், என மொத்தம் 76 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகளை வழங்கி, பணியாளர்கள் தங்கள் பணியில் சிறப்புற பணியாற்ற வாழ்த்தினார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து பணி நியமன ஆணைகளைப் பெற்றுக் கொண்ட பணியாளர்கள் தங்கள் வாழ்வில் விளக்கேற்றியமைக்காக தங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள், தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 24.1.2012.